www.rktuitioncentre.blogspot.in 

**1101(N)**

பதிவு எண் | 1 | 0 | 0 | 2 | 6 | 3 | 5

# தமிழ் - முதல் தாள்
# Language – Part A – TAMIL – Paper I
**( செய்யுள், உரைநடை )**

**( NEW SYLLABUS )**

www.rktuitioncentre.blogspot.in

நேரம் : 2 $\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

***அறிவுரை :*** அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

***குறிப்பு :*** i) இவ்வினாத்தாள் ஐந்து பிரிவுகளைக் கொண்டது.

ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

## பிரிவு - I
( மதிப்பெண்கள் 20 )

### பகுதி - 1

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 6 × 1 = 6

1. ‘இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே’ எனப் பாடியவர்

அ) பாரதியார் ஆ) சுரதா

இ) பாரதிதாசன் ஈ) கவிமணி.

2. இளங்கோவடிகள் எந்த நாட்டைச் சேர்ந்தவர் ?

அ) சோழ நாடு

ஆ) சேரநாடு

இ) பாண்டிய நாடு.

[ திருப்புக

www.way2exam.co.cc

www.rktuitioncentre.blogspot.in Page 2 of 7

www.rktuitioncentre.blogspot.in



3. துடியன், நாயினன், தோல்செருப்பு ஆர்த்தபேர்
அடியன், அல்செறிந் தன்ன நிறத்தினான் — இப்பாடல் அடிகளில் அமைந்த நயம்

அ) எதுகை ஆ) இயைபு

இ) முரண் ஈ) அணி.

4. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் - எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்ற நூல்

அ) திருக்குறள் ஆ) நாலடியார்

இ) ஏலாதி ஈ) தேவாரம்.

5. உலகில் மொழி உருவம் பெறுவதற்கு முன் .................. பிறந்து விட்டது என்பர்.

அ) நாடகம் ஆ) நாட்டியம்

இ) இசை ஈ) கூத்து.

6. மேடைப்பேச்சில் மக்களை ஈர்த்தவர்

அ) பேரறிஞர் அண்ணா

ஆ) மு. வரதராசனார்

இ) கா. அப்பாத்துரையார்.

## பகுதி - 2

கோடிட்ட இடத்தை நிரப்புக : 6 × 1 = 6

7. அரி என்னும் சொல்லின் பொருள் ...................

8. சேக்கிழார் பெருமானைப் புகழ்ந்து பாடியவர் ................... .

9. போலிப் புலவர்களின் தலையை வெட்டுபவர் ................... .

10 ஞாலம் என்னும் தமிழ்ச் சொல் ................... என்னும் சொல்லடியாகத் தோன்றியது.

11 தமிழ், மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர் ................... ஆவார்

12. இராமலிங்கர் தமிழ் மொழியே ................... தரும் என்று கருதினார்.

www.way2exam.co.cc

www.rktuitioncentre.blogspot.in Page 3 of 7



## பகுதி - 3

www.rktuitioncentre.blogspot.in

பொருத்துக : 4 × 1 = 4

13. கலித்தொகை — திருநாவுக்கரசர்
14. சீறாப்புராணம் — சாலை இளந்திரையன்
15. பூத்தது மானுடம் — உமறுப்புலவர்
16. தேவாரம் — நல்லந்துவனார்.

## பகுதி - 4

விடைக்கேற்ற வினா அமைக்க : 4 × 1 = 4

17. தொழில் நுட்பப் பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன.
18. காந்தியடிகள், பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்.
19. பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார் பெரியார்.
20. செய்திப்படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்.

## பிரிவு - II

( மதிப்பெண்கள் : 20 )

## பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 5 × 2 = 10

21. இறைவனை வாழ்த்தும் போது மாணிக்கவாசகர் எந்நிலையில் இருந்தார் ?
22. குகனின் வேண்டுகோள் யாது ?
23. 'இப்போது இங்கு அவன் உதவான்' யார் யாரிடம் கூறியது ?
24. வயல் தரும் விளைவுகள் யாவை ?

[ திருப்புக

www.way2exam.co.cc

www.rktuitioncentre.blogspot.in Page 4 of 7


www.rktuitioncentre.blogspot.in

25. வேந்தற்குரிய பொருள்கள் யாவை ?

26. கலம்பக உறுப்புகள் நான்கினை எழுதுக.

27. திருவள்ளுவருக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை ?

## பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 5 × 2 = 10

28. தமிழ் மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.

29. வள்ளலாரின் முழக்கம் யாது ?

30. மொழிமாற்றம் என்றால் என்ன ?

31. ஏற்றுமதி இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை ?

32. நோய் வருவதற்கான காரணம் பற்றி வள்ளுவர் கூறுவதென்ன ?

33. காந்தியடிகளின் அறவழிப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை ?

34. சிறுதொழிற் பயிற்சி பற்றிக் குறிப்பு எழுதுக.

## பிரிவு - III

( மதிப்பெண்கள் : 24 )

## பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 3 × 4 = 12

35. சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை ?

36. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை ?

37. கம்பராமாயணம் - நூற்குறிப்பு எழுதுக.

38. நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.

39. சாதனைப் பூக்கள் என்று எவற்றைச் சாலையார் சுட்டுகிறார் ?

www.way2exam.co.cc

www.rktuitioncentre.blogspot.in Page 5 of 7



## பகுதி - 2

www.rktuitioncentre.blogspot.in

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : 3 × 4 = 12

40. பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துக்கள் யாவை ?

41. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கார் ஆற்றிய பணி யாது ?

42. கடல் வாணிகம் குறித்து எழுதுக.

43. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது ?

44. மேடைப் பேச்சின் திறம் குறித்துக் குறள் கூறும் செய்திகள் யாவை ?

## பிரிவு - IV

( மதிப்பெண்கள் : 10 )

45. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க : 5

குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர் - கட்டி
வளர்ந்தனை பால்முந்திரிகை வாழைக் கனியாய்க்
கிளர்ந்தகரும் பாய்நாளி கேரத்து - இளங்கனியாய்

i) இப்பாடல் இடம் பெற்ற நூல் எது ?

ii) இப்பாடல் ஆசிரியரின் பெயர் யாது ?

iii) இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.

iv) செவியறுத்து - பிரித்து எழுதுக.

v) நாளிகேரம் - பொருள் கூறுக.

[ திருப்புக

www.way2exam.co.cc

www.rktuitioncentre.blogspot.in Page 6 of 7

www.rktuitioncentre.blogspot.in



46. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க : 5

மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் முதலியவை தொழிற்கல்வித் துறைகள். மேனிலைக் கல்வியில் உயர்மதிப்பெண் பெற்றோர் அந்தந்தப் பாடப் பிரிவின் தகுதிக்கேற்ப விண்ணப்பிக்கலாம். இவர்கள் கலந்தாய்வு மூலம் தேர்வு செய்யப்பட்டுக் கல்லூரிகளில் சேர்ந்து உரிய காலத்தில் படித்து முடிப்பர். படித்து முடித்தவர்கள் அவரவர் தகுதிக்கேற்ப உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரியும் வாய்ப்புண்டு.

தற்போது உயிரி-தொழில்நுட்பத்துறை, நுண்ணியல் தொழில்நுட்பத்துறை சார்ந்த தொழிற்படிப்புகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. வேதியியல், விலங்கியல் துறைகளில் இளங்கலைப் பட்டம் பெற்றவர்களுக்கும், சுற்றுச் சூழல், வேளாண்மை, மருத்துவம் முதலிய துறைகளில் பட்டம் பெற்றவர்களுக்கும் சிறந்த வேலை வாய்ப்புத் துறையாகத் தற்போது இது விளங்கி வருகிறது.

i) தொழிற்கல்வித் துறைகள் யாவை ?

ii) தொழிற் கல்வித் துறையில் நுழைவதற்கான கல்வித் தகுதி யாது ?

iii) தொழில் நுட்பக் கல்லூரிகளில் மாணவர்கள் எம்முறை மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர் ?

iv) உயிரி-தொழில்நுட்பத் துறையின் சிறப்பம்சம் யாது ?

v) இவ்வுரைப் பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு தருக.

www.rktuitioncentre.blogspot.in

www.way2exam.co.cc

www.rktuitioncentre.blogspot.in Page 7 of 7



## பிரிவு - V

( மதிப்பெண்கள் : 26)

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க : $2 \times 8 = 16$

47\. அ) கண்ணகிக்கும் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக.

*அல்லது*

ஆ) பொருளினது சிறப்பு, பொருளீட்டும் நெறி, பொருளீட்டுவதால் ஏற்படும் பயன்கள் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

48\. அ) கருத்துப்படம் பற்றியும் கல்விப்படம் பற்றியும் விளக்கி எழுதுக.

*அல்லது*

ஆ) தமிழன் அறிவியலின் முன்னோடி என்பதை விளக்குக.

### பகுதி - 2

49\. செய்யுள் வடிவில் விடை தருக : $2 + 2 + 6 = 10$

அ) இடிப்பாரை - எனத் தொடங்கும் குறள்

ஆ) பழி - என முடியும் குறள்

இ) உலகியலின் அடங்கலுக்கும் எனத் தொடங்கி வாரீர் என முடியும் 'தமிழ் வளர்ச்சி' பாடலடிகளை எழுதுக.

www.rktuitioncentre.blogspot.in

www.way2exam.co.cc